சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.14.07.2026.
OS.No.173/2020
DW2 : செந்தில்குமரன் (வயது 41 ) த/பெ. செல்வம்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>வாதி தரப்பு கு.வி</u>**

பிரதிவாதி தமிழரசி எனது உறவினரா என்றால் இல்லை எனது நண்பரின் அம்மா. இந்த வழக்கின் வாதி தாக்கல் செய்த பிராதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட 18.09.2013 ஆம் தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை பற்றி எனக்கு தெரியும்.

கிரய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யும்போது நான் சார்பதிவு அலுவலகத்தில் இருந்தேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் இலால்குடி சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

நான் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தை படித்து பார்க்கவில்லை. அந்த ஆவணத்தை படித்து பார்க்காமலே அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் வீடு வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

எனது நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதி வாதியிடம் கடன் தொகையாக ரூ.1,50,000/- பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் கடன் தொகை பெற்றுக்கொண்டதாக எந்த ஒரு வாசகமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே வா.சா.ஆ.1 பதிவு செய்த ஒப்பந்த ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் ஏற்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி எனது நண்பரின் தாயார் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதியிடம் கடன் வாங்கியதாகவும், அதனை திருப்பி

செலுத்திவிட்டதாகவும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யும்போது, நான் சார்பதிவு அலுவலகத்தில் இல்லை என்றும் அதனால், அந்த ஆவணம் எழுதிய விவரம் பற்றியோ, பதிவு செய்த விவரம் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/
செந்தில்குமரன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.07.14 17:51:31 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி